# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2020-2021

### மானியக் கோரிக்கை எண் – 35

**D. ஜெயக்குமார்**
**மீன் வளம், பணியாளர் மற்றும்**
**நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்**

©
**தமிழ்நாடு அரசு**
**2020**

| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 7 |
| 3 | தமிழ்நாடு தகவல் ஆணையம் | 10 |
| 4 | லோக் ஆயுக்தா | 13 |
| 5. | விழிப்புப் பணி ஆணையம் | 14 |
| 6. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் | 15 |
| 7. | ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் | 17 |
| 8. | ஆய்வுப் பிரிவு | 18 |
| 9. | பயிற்சி | 20 |
| 10. | முடிவுரை | 32 |

*அரசால் தீட்டப்படும் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும்; நலத்திட்ட உதவிகளை மக்களிடம் எடுத்துச் செல்வதிலும்; அரசின் வளர்ச்சி நோக்கங்களை எய்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் பொதுச் சேவையை நடைமுறைப்படுத்துவதிலும் அடித்தளமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள்.*

- மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா

# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## 2020 - 2021 - ஆம் ஆண்டிற்கான
## கொள்கை விளக்கக் குறிப்பு

## 1. முன்னுரை

அரசுப் பணிக்குத் தேவையான மனிதவள மேலாண்மையில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை முக்கிய பங்காற்றுகிறது. அரசுப் பணியிடங்களுக்கு பணியாளர்களை தேர்வு செய்தல், அவர்களின் பதவி உயர்வு, முதுநிலை, பயிற்சி, ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியன குறித்த பொதுவான வழிகாட்டுதல்களை இத்துறை வெளியிடுகிறது. பொதுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களை உரிய காலமுறையில் ஆய்வு செய்வதன் மூலம் நிருவாகம் செம்மையாக செயல்படுவதை இத்துறை உறுதி செய்கிறது.

இத்துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி) என இரண்டு அலகுகளாக பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது :-

அ. <u>ஆலோசனை வழங்கும் பணிகள்</u>

தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்

ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இத்துறை பின்வரும் இனங்களில் தலைமைச் செயலகத் துறைகளுக்கு அறிவுரை வழங்குகிறது:

i. தமிழ்நாடு மாநிலப் பணிகள் மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிகளில் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கான காலிப் பணியிட மதிப்பீடு மற்றும் அப்பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரித்தல்;

ii. அரசுப் பணியாளர்களின் பணி வரன்முறைப் படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவம் விளம்புதல் குறித்தான சிறப்பு விதிகள் / தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, ஆகியவற்றின்படி அறிவுரை வழங்குதல்;

iii. அடிப்படை விதிகள் குறித்த தெளிவுரைகள் வழங்குதல்;

iv. பணி முதுநிலையை மாற்றியமைத்தல் குறித்த கருத்துருக்களை விதிக்கூறு களின்படி ஆய்வு செய்தல்.

ஆ. <u>சட்டரீதியான பணிகள்</u>

1. பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை மாநில அரசுப் பணியாளர்களின் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக)

பணி தொடர்பான பின்வரும் சட்டரீதியான பணி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை நிருவகித்தல் :

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 [தமிழ்நாடு சட்டம் எண். 14/2016];

ii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973;

iii. தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;

iv. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955;

v. தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955;

vi. தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள்;

vii. தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள்;

viii. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகள்- இனம் XXII.

2. தலைமைச் செயலகம் தொடர்பான விதிகள்:

i. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள்;

ii. தமிழ்நாடு பொதுப்பணிக்கான சிறப்பு விதிகள் – இனம் XII மற்றும் XII-A;

iii. தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூல்.

3. அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகளுக்கான விதிகள்:

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954;

ii. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005;

iii. தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல் முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012;

iv. தமிழ்நாடு தகவல் ஆணையப் பணி விதிகள், 2017;

v. தமிழ்நாடு லோக்ஆயுக்தா சட்டம், 2018 (தமிழ்நாடு சட்டம் எண். 33/2018);

vi. தமிழ்நாடு லோக்ஆயுக்தா விதிகள், 2018.

4. அரசின் அலுவல் தொடர்பான விதிகள்;

   i. தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்;
   ii. மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்.

இ. <u>நிருவாகப் பணிகள்</u>

   i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு தகவல் ஆணையம், தமிழ்நாடு லோக்ஆயுக்தா போன்ற அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகளுக்கான அதிகாரம் உள்ளவர்களை நியமனம் செய்வது தொடர்பான பணிகள்;
   ii. கீழ்காணும் அமைப்புகளுக்கான நிருவாகப் பணிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் அளித்தல் : -
      - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்;
      - தமிழ்நாடு தகவல் ஆணையம்;
      - தமிழ்நாடு லோக்ஆயுக்தா;
      - மாநில விழிப்புப் பணி ஆணையம்;
      - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்;
      - ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்;
      - பயிற்சித் துறை தலைவர் அலுவலகம்.

iii. தலைமைச் செயலகத்தில் 'ஓர் அலகு முறை'யின் (One Unit) கீழ்வரும் அரசு சார்புச் செயலாளர்கள் பணிநிலை வரையுள்ள அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு;

iv. பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அரசுப் பணியாளர்களின் குறைகளை பரிசீலித்தல் ;

ஈ. <u>பயிற்சி</u>

கீழ்காணும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது:-

- இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர் களுக்கு பவானிசாகர் குடிமைப் பணிகள் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி;
- மாவட்டத் தலைநகரங்களில் பரவலான அடிப்படைப் பயிற்சி;
- புதிதாக பணிநியமனம் செய்யப்பட்ட தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி;
- அண்ணா மேலாண்மை நிலையத்தில் மேலாண்மை மற்றும் ஆதார வளங்கள் குறித்த பயிற்சி;
- தலைமைச் செயலக உதவிப் பிரிவு அலுவலர்கள் மற்றும் பிரிவு அலுவலர்களுக்கான புத்தாக்க / பணியிடைப் பயிற்சி.

## 2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315 (1)-ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள், 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளின் படி நிருவகிக்கப் படுகின்றன. தற்போது தேர்வாணையம் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பணியாளர்களைத் தெரிவு செய்யும் பணியை முக்கியப் பணியாக கொண்டுள்ள முகமையாகச் செயல்படுகிறது. அரசுப் பணிகளுக்கு பணியாளர்களை தெரிவு செய்வதுடன், தேர்வாணையம், அரசுப் பணியாளர் களுக்கான துறைத் தேர்வுகளையும், மத்திய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் சார்பாக ஆண்டிற்கு இருமுறை டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளையும் நடத்துகிறது.

இதனுடன், பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து

மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளை வகுப்பது மற்றும் அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்த அனைத்து நேர்வுகளிலும் அரசுக்கு ஆலோசனையினை தேர்வாணையம் வழங்குகிறது.

ஒரு முறை பதிவு செய்தலுக்கான தகவல் தொகுப்பு, பயன்பாட்டிற்கு எளிதாக இணையதளம் வழியாக விண்ணப்பங்களை பெறுதல், தன்விவர (Personalised OMR) விடைத் தாட்களை உபயோகப்படுத்துவது, தொழில்நுட்ப பதவிகளுக்கான கணினி வழியான தேர்வு, தேர்வு மையங்களை இணையவழியாக கண்காணித்தல் / ஒளிப்பதிவு செய்தல், பொதுச் சேவை மையங்கள் மூலமாக சான்றிதழ் சரிபார்த்தல் போன்ற நடைமுறைகளை மேற்கொள்வதற்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தெரிவுப் பணிகளை தேர்வாணையம் சிறப்பாக செய்துவருகிறது.

தேர்வாணையம் தனது தெரிவுப் பணியில், கொள்குறிவகை தேர்வுகளுக்கான விடைகளை தனது இணையதளத்தில் தேர்வு முடிவுற்றவுடன் வெளியிடுவது மற்றும் தேர்வர்கள் தங்களது விரிவானவகை விடைத்தாட்களை தேர்வாணைய

அலுவலகத்தில் பார்வையிட அனுமதிக்கப்படுவது போன்ற நடவடிக்கைகள் மூலம் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றினை உறுதி செய்கிறது. அலகு / பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்படுகிறது. மேலும், காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட பிற முகமைகளில் பின்பற்றப்படும் சிறந்த தெரிவு நடைமுறைகளை மாநிலத்தில் செயல்படுத்துவது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் புகார்களுக்கு இடமளிக்காத வாறும் தெரிவுப் பணியை செம்மைப் படுத்துமாறும் தேர்வாணையத்திற்கு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது.

அனைத்துத் தேர்வு மையங்களிலும் மாற்றுத் திறனாளி தேர்வர்கள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுதுவதற்கு வசதி செய்து கொடுத்து வருவதுடன், தேவைப்படின் அவர்களுக்கு உதவியாளர்களும் தேர்வாணையத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், எழுதும் திறன் பாதிக்கப்பட்ட மேற்படி நபர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு கூடுதல் நேரம் வழங்கப்படுகிறது.

துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க ஒற்றைச்சாளர முறை, தேர்வாணையத்தால் பின்பற்றப்படுகிறது.

தேர்வர்கள் தங்களை முன்கூட்டியே தயார் செய்து கொள்ள ஏதுவாக, தேர்வாணைய போட்டித் தேர்வுகளுக்கான ஆண்டு திட்ட அட்டவணை ஒவ்வொரு ஆண்டும் முன்னதாகவே வெளியிடப் படுகிறது. மேலும், கடந்த இரண்டாண்டுகளில் மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வாணையம் 17,719 தேர்வர்களை தெரிவு செய்துள்ளது.

தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை இத்துறையால் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

## 3. தமிழ்நாடு தகவல் ஆணையம்

தமிழ்நாடு தகவல் ஆணையம், 07.10.2005 அன்று அமைக்கப்பட்டு, ஒரு தலைமை தகவல் ஆணையர் மற்றும் 6 தகவல் ஆணையர்களைக் கொண்டு இயங்கிவருகிறது. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துவது தகவல் ஆணையத்தின் கடமையாகும்.

பொது அதிகார அமைப்பு எதனாலும் அல்லது அதன் கட்டாள்கையின் கீழ் வைத்து வரப்படும் தகவலை அவை எந்த வடிவத்தில் இருந்தாலும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாளிலோ, அல்லது மின்னணுப் பதிவு முறையிலோ, அல்லது மாதிரிகளாகவோ உள்ள தகவலைப் பெறவும், மேலும் பணிகள், ஆவணங்கள் மற்றும் பதிவுருக்களை பார்வையிடுவதற்கும் குடிமக்கள் உரிமை பெற்றுள்ளதன் மூலம் குடியரசின் ஆளுகையில் முனைப்புடன் பங்கேற்பதற்கு இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.

விண்ணப்பிக்கும் போதும், அதன் பின்னர் ஆவணங்களின் நகல்களைப் பெறுவதற்கும் அல்லது பார்வையிடுவதற்கும் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் குறித்த நடை முறைகள் தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்டம் (கட்டணங்கள்) விதிகள், 2005-ல் வகுக்கப்பட்டுள்ளன. தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 7(5)-ன்படி வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள விண்ணப்பதாரர்களுக்கு கட்டணம் ஏதும் விதிக்கப்படுவதில்லை. மேல்முறையீட்டு அலுவலரிடம் செய்யப்படும் முதல் மேல் முறையீடு மற்றும் ஆணையத்திற்கு செய்யப்படும் இரண்டாம் மேல்முறையீடு ஆகியவற்றிற்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை.

ஆணையத்தின் வலைதளத்தில், (www.tnsic.gov.in) வழக்கு விவரப் பட்டியல் மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டின் மீதான ஆணையத்தின் முடிவுகள் ஆகியவை பதிவேற்றப்பட்டு வருகின்றன. இந்த இணையதளம் மூலமாக இரண்டாம் மேல்முறையீடு செய்யும் வசதியும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு 3.26 இலட்சம் விண்ணப்பங்கள் பொது அதிகார அமைப்புகளால் முறையாக பரிசீலிக்கப்பட்டு 2.46 இலட்சம் விண்ணப்பங்களில் கோரப்பட்ட தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. இணையவழியாக மொத்தம் 123 இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்கள் 31.12.2019 வரையில் ஆணையத்தால் பெறப்பட்டுள்ளன.

ஆணையத்தின் முடிவுகள் / ஆணைகள், நாட்டிலேயே முதல் முறையாக பிரேய்லி அச்சு எழுத்து வடிவில், பார்வை குறைபாடு உடையவர்களிடமிருந்து தனிப்பட்ட வகையில் கோரிக்கை பெறப்படும் நேர்வுகளில், சென்னையில் உள்ள பார்வை குறைபாடு உடையவர்களுக்கான தேசிய நிறுவனத்தின் (National Institute for the Visually Handicapped Regional Centre) மண்டல மையத்தின் உதவியுடன் வழங்கப்படுகிறது.

பொதுமக்களுக்கும், பொதுத் தகவல் அலுவலர்களுக்கும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்

மற்றும் தகவல் அளித்தல் தொடர்புடைய பல்வேறு நடைமுறைகள் குறித்து தேவையான உதவிகளை, ஆணையத்தில் இயங்கிவரும் உதவி மையம் (Help Desk) அளித்து வருகிறது.

சென்னை சைதாப்பேட்டையில் தகவல் ஆணையத்திற்காக கட்டடம் கட்டுவதற்கு ரூ.27.79 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாணையத்தின் ஆண்டறிக்கை இத்துறையால் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

## 4. லோக் ஆயுக்தா

அரசுப் பணியில், தூய்மையான நிருவாகம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் 2018-ம் ஆண்டு தமிழ் நாடு லோக் ஆயுக்தா சட்டம், 13.11.2018 அன்று முதல் அமல்படுத்தப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு லோக்ஆயுக்தா விதிகளும் இயற்றப்பட்டுள்ளன.

இதன்படி பொது ஊழியர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அவை சம்பந்தமான விசாரணை செய்வதற்கென 'தமிழ்நாடு லோக் ஆயுக்தா' என்ற அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

லோக் ஆயுக்தா அமைப்பு அதன் தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களுடன் முழுமையாக

செயல்படுவதுடன் இவ்வமைப்பிற்கு பல்வேறு நிலைகளில் 103 பணியிடங்கள் ஒப்பளிக்கப் பட்டுள்ளன.

லோக்ஆயுக்தா, சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையில் தற்காலிகமாக இயங்கிவருவதற்கு ஏதுவாக ரூ.11.65 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, கிண்டி, திருவிக. தொழிற்பேட்டையில் உள்ள சிட்கோ வளாகத்தின் 6 மற்றும் 7 - வது தளங்கள் இந்த அமைப்பிற்கான அலுவலக பயன்பாட்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதி அளிப்பதற்கு ஏதுவாக ரூ.6.23 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 5. விழிப்புப்பணி ஆணையம்

பொதுப் பணிகளில் நிருவாக ரீதியாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், ஊழல் குறித்த ஒவ்வொரு இனங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மையான நோக்கமாகும். மாநிலத்தின் சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பொது ஊழியர்கள் மீது விழிப்புப்பணி ஆணையம் தமது வரம்பினை கொண்டுள்ளது.

## விழிப்புப்பணி ஆணையத்தின் நோக்கங்கள்:-

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டதாகவோ அல்லது ஊழல் புரிந்துள்ளதாகவோ அல்லது தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல் ;

(ii) இதற்காகத் தேவைப்படும் தகவல் அல்லது புள்ளி விவரங்களை சேகரித்தல்;

(iii) தமது வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகளில் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, எந்தவொரு அரசுத் துறை அல்லது அரசு நிறுவனம் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

## 6. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

விழிப்புப்பணி ஆணையம் அதன் பணிகளை செயல்படுத்துவதற்கு தேவையான உதவிகளை இயக்ககம் வழங்குகிறது. விழிப்புப்பணி ஆணையம் / அரசு / லோக்ஆயுக்தா ஆகியவற்றின் உத்தரவின் பேரில் விசாரணை மேற்கொண்டு, விசாரணை

அறிக்கையினை சமர்ப்பிக்கிறது. மேலும் இந்த இயக்ககம், புகார் / குற்றச்சாட்டு மனுக்களின் மீதான விசாரணைகளையும் மேற்கொண்டு அதன் அறிக்கைகளை உரிய அமைப்புகளுக்கு வழங்குகிறது.

இவை தவிர, 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புகார்கள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து இந்த இயக்ககம் புலனாய்வு செய்கிறது.

ஊழல் தொடர்பான வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்காகவே சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 8 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநிலத்தின் அந்தந்த மாவட்டங்களில் உள்ள சிறப்பு நீதிமன்றங்களில் பணிபுரியும் முதன்மை அமர்வு நீதிபதிகள் மற்றும் சிறப்பு நீதிபதிகள், 1988-ம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க அதிகாரம் கொண்டுள்ளனர். இதன்படி, மாநிலத்தில் 39 நீதிமன்றங்கள் மேற்படி சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரணை செய்கின்றன.

பொதுவாழ்வில் தூய்மை குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அனைத்துத் தலைமைச் செயலக துறைகள், துறைத் தலைவர்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் குழுமங்களுக்கு, ஊழல் தடுப்பு குறித்த வாசகங்களை அனைவரின் பார்வையில்படும் வகையில் அலுவலகங்களில் வைத்திடவும், மேலும் அதனை அரசு வலைதளத்தில் பதிவேற்றும்படியும் உரிய அறிவுறுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அரசு சென்னை வர்த்தக பொருட்காட்சியிலும் இதற்கான ஓர் அரங்கம் அமைக்கப்படுகிறது.

## 7. ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் மாநில அரசிலும் நகராட்சி அமைப்புகளிலும் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மீது சுமத்தப்படும் சாட்டுரைகளை விசாரணை செய்வதற்காக ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. நீதிமுறை சார்புடைய (Quasi Judicial) அதிகாரங்களைக் கொண்டுள்ள மேற்படி தீர்ப்பாயங்கள், சாட்சிகளை விசாரணைக்கு அழைப்பதற்கும் தேவைப்படும் ஆவணங்களை கோருவதற்கும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள் 1955-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி விசாரணையை மேற்கொள்ளவும் அதிகாரம் கொண்டுள்ளன.

இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் தற்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, மற்றும் நாகர்கோவில் ஆகிய ஆறு இடங்களில் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் இயங்கி வருகின்றன. இத்தீர்ப்பாய ஆணையருக்கு வழக்கு விசாரணையில், ஒழுங்கு நடவடிக்கை வழக்கறிஞர்கள் (Prosecutors for Disciplinary Proceedings) உதவி புரிகின்றனர். இத்தீர்ப்பாயங்களின் விசாரணை அறிக்கையினை ஆணையர்கள் உரிய மேல்நடவடிக்கை தொடரும் பொருட்டு தொடர்புடைய அரசு நிருவாகத் துறைக்கு அனுப்பி வைக்கின்றனர். மேற்படி தீர்ப்பாயங்களின் விசாரணை அறிக்கையினை ஆராய்ந்து உரிய இறுதி ஆணையினை அரசு பிறப்பிக்கிறது.

## 8. ஆய்வு

நிருவாகத்திறனை மேம்படுத்தவும், தாமதங்களைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றை ஆய்வு அலுவலர்கள் காலமுறையில் ஆய்வு செய்யும் முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆய்வுப் பிரிவின் 3 ஆய்வுக் குழுக்கள், அரசு துணைச் செயலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள அலுவலர்கள் தலைமையில் வருடாந்திர ஆய்வுத் திட்ட கால அட்டவணைப்படி ஆய்வு நடத்தும் பணியை மேற்கொண்டு வருகிறது.

ஆய்வுக்குப் பிறகு, முதனிலை ஆய்வுக் குறிப்புகள் தயார் செய்யப்பட்டு, அதன்மீது குறைகளைவு அறிக்கை அனுப்ப வேண்டி தொடர்புடைய துறைத்தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்படுகிறது. குறைகளைவு அறிக்கை பெறப்பட்டு மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களால் இறுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவரால் அளிக்கப்படும் பொதுக்குறிப்பு, தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக சம்மந்தப்பட்ட தலைமைச் செயலக நிர்வாகத் துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரையிலான காலத்தில், தலைமைச் செயலகத் துறைகள் / துறைத் தலைமையகங்கள் / வாரியங்கள் / மாநகராட்சி அலுவலகங்களில், 26 முதனிலை மற்றும் 28 இறுதி ஆய்வுகளை இத்துறையின் ஆய்வுக் குழுக்கள் மேற்கொண்டுள்ளன.

துணை ஆட்சியர் நிலையிலுள்ள ஆய்வுக் குழு அலுவலர் தலைமையில் இயங்கும் 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள், வட்டாட்சியர் நிலையிலுள்ள

துணை ஆய்வுக் குழு அலுவலர் உதவியுடன் மாவட்ட அளவில் உள்ள அலுவலகங்களில் ஆண்டாய்வுகள், திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதுடன், அந்தந்த மாவட்ட விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக்குழு பிரிவுகளுக்கு திடீர் ஆய்வு மேற்கொள்வதில் உதவி புரியும் பணியையும் மேற்கொள்கின்றன.

மாவட்ட ஆய்வுக் குழுக்கள், 2019-2020-ஆம் ஆண்டு, 31 டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், 76 வருடாந்திர ஆய்வுகளையும் 1956 திடீர் ஆய்வுகளையும் மேற்கொண்டதுடன் விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் 71 ஒருங்கிணைப்புக் கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

## 9. பயிற்சி

செயற்திறனை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட திட்டமிட்ட செயலே பயிற்சியாகும். இது பணியாளர்கள் குறிப்பிட்ட பணியைச் செய்ய அவர்களுடைய அறிவு, திறன், மனப்பாங்கு, சமூக நடத்தை ஆகியவற்றில் அளவிடத்தக்க மாற்றங்களை கொண்டு வருகிறது. சிறந்த பயிற்சியுடனான மனித வளமானது நிறுவனத்திற்கு மேம்பட்ட பங்களிப்பை அளிக்கும்.

## I. தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்

தலைமைச் செயலகத் துறைகளில் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர் மற்றும் தட்டச்சர்களுக்கு தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப் படுகிறது. இப்பயிற்சி நிலையம் டிசம்பர் 2019 வரை 98 அணிகளுக்கு அடிப்படை பயிற்சி அளித்துள்ளது.

தலைமைச் செயலகத்திற்கு புதிதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணிசார் திறனை மேம்படுத்தும் வகையில், மிகவும் பொருத்தமான மற்றும் பணிசார்ந்த பாடத்திட்டங்களை இணைத்து அவர்கள் செம்மையாக பணியாற்றும் வகையில் தற்போது நடைமுறையிலுள்ள தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியானது, மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட முறையிலான அடிப்படைப் பயிற்சி திட்டத்தில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட தலைமைச் செயலகப் பணியாளர்களின் பணிசார் திறனை மேம்படுத்த வலியுறுத்தப்பட்டுள்ளது. உணர்வுசார் நுண்ணறிவு, சமூக நுண்ணறிவு மற்றும் பணிசார் நெறிமுறை போன்றவைகள் இப்புதிய பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. இப்புதிய முறையிலான அடிப்படைப் பயிற்சி வரும் நிதியாண்டு 2020-2021 முதல் நடத்தப்படும்.

## II. பயிற்சித் துறைத் தலைவர்

i) பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம், ii) அ மற்றும் ஆ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம், iii) அகில இந்தியக் குடிமைப் பணித்தேர்வுப் பயிற்சி மையம் iv) போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் மற்றும் v) அண்ணா மேலாண்மை நிலையம் ஆகிய பயிற்சி நிலையங்களின் மீதான நிருவாகம் மற்றும் நிதிக் கட்டுப்பாடு, இவற்றின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிகளை பயிற்சித் துறைத் தலைவர் மேற்கொண்டு வருகிறார்.

நல்ஆளுமை விருதிற்கான விண்ணப்பங்களைப் பயிற்சித் துறைத் தலைவர் பெற்று அவற்றை ஆய்வுக்குழு மற்றும் தேர்வுக் குழுக்களின் முன் பரிசீலனைக்காக வைக்கிறார்.

### i) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு அமைச்சுப் பணி, தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணிகளுக்கு புதிதாக தெரிவுசெய்யப்படும் பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் 71.32 ஏக்கர் பரப்பளவில் இயற்கை எழில் நிறைந்த


சூழலில் அமைந்துள்ளது. இது புதிதாக பணியில் தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க உகந்த சூழ்நிலையை அளிக்கிறது.

இப்பயிற்சி நிலையம், நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், நூலகம், கலையரங்கம், விடுதி தொகுப்புகள், பணியாளர் குடியிருப்புகள், நவீன சமையல் கூடம், உணவருந்தும் கூடங்கள், உள்விளையாட்டரங்க வளாகம் மற்றும் விருந்தினர் மாளிகை ஆகியவற்றை கொண்டுள்ளது. அரசின் நவீனமயமாக்கல் முயற்சியின் காரணமாக, இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவோர்களின் எண்ணிக்கை ஒரு அணிக்கு 250 லிருந்து 685 ஆக உயர்ந்துள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.5.04 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2019-2020 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையத்தின் பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக கூடுதல் வகுப்பறைகள், தங்கும் விடுதிகள் கட்டுவதற்காக மேலும் ரூ.10.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நிலையமானது 2019 ஆம் ஆண்டில் 4654 பணியாளர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

இப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, இந்நாள் வரை 1,24,606 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.




புதிதாக நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்களுக்கு உரிய நேரத்தில் பயிற்சியளிக்கும் வகையில் 28 மாவட்டங்களில் பரவலாக்கப்பட்ட தங்கும் வசதியற்ற 37 நாட்கள் கொண்ட அடிப்படைப் பயிற்சியை வழங்க ரூ.1.22 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## (ii) 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையம், சென்னை

சென்னையிலுள்ள 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையம், பல்வேறு அரசு துறைகளில் உள்ள குறிப்பிட்ட 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சியினை வழங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையமானது மாவட்ட வருவாய் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், சட்டம், பொது நிதி, மேலாண்மை, திட்டம் மற்றும் வளர்ச்சி, பொருளாதாரம், தகவல் பெறும் உரிமைச் சட்டம், கணினி மற்றும் உடற்பயிற்சி போன்ற பாடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நிருவாகம் மற்றும் செயல்திறன் பணிகளை அலுவலர்கள் திறம்பட செயல்படுத்த இப்பயிற்சியானது உதவுகிறது.

2019 ஆம் ஆண்டில் மொத்தம் 374 அலுவலர்கள் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுள்ளனர்.

## (iii) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம், சென்னை

நாட்டிலுள்ள பழமையான மையங்களில் ஒன்றான சென்னையிலுள்ள அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையமானது, விளிம்பு நிலையிலுள்ள

சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணிகளுக்கான தேர்வினை எதிர்கொள்ள பயிற்சியளிக்கிறது. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணித் தேர்வுக்கான முதல் நிலை, முதன்மை நிலை மற்றும் ஆளுமை தேர்வு ஆகிய மூன்று நிலைத் தேர்வுகளுக்கும் தேவையான, கட்டணம் இல்லா முழுமையான பயிற்சிகளை இப்பயிற்சி நிலையம் வழங்கி வருகிறது.

இப்பயிற்சி நிலையமானது, 245 முழுநேர உள்ளுறை தேர்வர்கள் மற்றும் 100 பகுதி நேர தேர்வர்களுக்கு முதல் நிலை தேர்வுக்கான பயிற்சியினையும், 225 முழுநேர உள்ளுறை தேர்வர்களுக்கான 3 மாத கால (ஜூலை முதல் அக்டோபர் வரை) முதன்மைத் தேர்வுக்கான பயிற்சியினையும் வழங்கி வருகிறது. முதன்மை தேர்வுக்காக பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பயிற்சிக் கையேடுகள் வாங்கும் பொருட்டு மாத உதவித் தொகை ரூ.3000 /- வழங்கப்படுகிறது.

இப்பயிற்சி மையத்தில் சிறப்பான வசதிகளைக் கொண்ட நூலகத்திலுள்ள புத்தகங்கள் மற்றும் இதழ்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் ஆண்டுதோறும் ரூ.3 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

2018 ஆம் ஆண்டில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அகில இந்தியக் குடிமைப் பணிகள் மற்றும் இந்திய வனப் பணிக்கு 47 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

2019 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட தேர்வர்களில் 43 தேர்வர்கள் குடிமைப் பணிகள் (முதன்மை) தேர்வு, 2019-ல் தேர்ச்சி பெற்றுள்ளனர். மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஆளுமைத் தேர்வை எதிர்கொள்ளும் வகையில் இம்மையம் ஒவ்வொரு மாணவருக்கும் சிறப்பான இரண்டு மாதிரித் தேர்வுகளை நடத்தி தேவையான பயிற்சி அளித்து வருகிறது. ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு புது தில்லியில் உள்ள தமிழ் நாடு இல்லத்தில் சலுகைக் கட்டணத்தில் தங்கும் வசதியும், இடைநிகழ் செலவிற்காக ரூ.2000/- வழங்கப்பட்டு வருகிறது.

அண்மையில் ரூ.60 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்ட பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகளால் இம்மையத்தின் வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் மேம்படுத்தப்பட்டு பொலிவுடன் திகழ்கிறது.

மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு பிரெய்லி வரைபடம் மற்றும் சிறப்பு மென்பொருள் போன்ற சிறப்பான கற்கும் வசதிகள் இப்பயிற்சி மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் எளிமையாக பயன்படுத்தும் வண்ணம் இப்பயிற்சி நிலைய கட்டடம் அமைந்துள்ளது.

அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி நிறுவனங்கள், குடிமைப் பணிகளுக்கான (முதனிலை தேர்வுகளுக்கு) பயிற்சி அளிப்பதற்காக மதுரையில் உள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் அரசின் நிதியுதவியுடன் இயங்கி வருகிறது.

### (iv) போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம், மத்திய, மாநில மற்றும் வங்கி அமைப்புகளால் வேலை வாய்ப்பிற்காக நடத்தப்பெறும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சியினை வழங்கி வருகிறது. இப்பயிற்சி மையத்திற்கான மாணவர்கள் சேர்க்கை, பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் மாநில இடஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுகிறது.

இப்பயிற்சி மையத்தில் இதுவரையில் 6 அணிகளில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. அவர்களுக்கு ரூபாய் 1000 மதிப்பிலான இலவசப் பயிற்சிக் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன. போதிய புத்தகங்களைக் கொண்டுள்ள நூலகம் இம்மையத்தில் இயங்கி வருகிறது.

அதிக எண்ணிக்கையிலான வேலை தேடும் இளைஞர்களின் பங்கேற்புடன் அரசால் ஆகஸ்ட் 2019 ல் ஊக்க முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் பங்கேற்றவர்களுக்கு இலவச பயிற்சி கையேடுகள் வழங்கப்பட்டன.

2019-2020 ஆம் ஆண்டில் சென்னையில் இரண்டாவதாக ஒரு பயிற்சி மையமும் அதனுடன் கோவை, சேலம் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் 4 புதிய போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் துவங்குவதற்கு அரசு ரூ.4.44 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## (v) அண்ணா மேலாண்மை நிலையம்

1981 - ல் துவங்கப்பட்ட அண்ணா மேலாண்மை நிலையமானது, மாநில நிருவாகப் பயிற்சி நிலையம் எனத்திகழ்கிறது. அகில இந்தியப் பணி அலுவலர்கள் முதல் அமைச்சுப் பணி பணியாளர்கள் வரையிலான அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கக் கூடியபயிற்சி முகமையாக இந்நிலையம் செயல்படுகிறது.

இந்நிலையம், குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள், கணினி மையம், 200 இருக்கைகள் கொண்ட கலையரங்கம் ஆகியவற்றை அமையப் பெற்றுள்ளது. மின் நுகர்வைக் குறைக்கும் வகையில் கட்டடத்தின் மேற்பரப்பில் சூரிய ஒளி மின் நிலையத்தினை இந்நிலையம் அமைத்துள்ளதோடு இங்கு நிறுவப்பட்ட பசுமை உரத்தொட்டிகள் ஒரு பசுமை முயற்சியாகும்.

இந்நிறுவனமானது, நடைமுறையிலுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள், நீதிமன்ற ஆணைகள் மற்றும் பல்வேறு துறைகளின் சிறந்த நடைமுறைகள் குறித்த அலுவலர்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கில் பயிற்சி அளித்து வருகிறது.

தகவல் பெறும் உரிமைச் சட்டம், வருமான வரி திட்டமிடல் மற்றும் முதலீடு திட்டமிடல், தலைமைத்துவ பண்புகள், மின் ஆளுகை, பெண்கள் அதிகாரம் பெறுவதற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் பாலின உணர் திறன் போன்ற பாடங்களில் சிறப்பு பயிற்சிகள் இந்நிலையத்தால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நிறுவனமானது பல்வேறு அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப பயிற்சிகளை வழங்கி வருகிறது.

2019-2020 ஆம் நிதியாண்டில், ஜனவரி 2020 வரை 543 பயிற்சிகளை 22,744 பயிற்சியாளர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் மதுரை,

திருச்சி மற்றும் சேலத்தில் உள்ள மண்டல பயிற்சி நிலையங்கள் அளித்துள்ளது.

**2019- 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சிறப்புப் பயிற்சிகள்**

- 2017- 2019 அணியை சேர்ந்த இந்திய வனப்பணி அலுவலர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி;
- மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மை கல்வி அலுவலர்களுக்கான சிறப்புப் பயிற்சி;
- தலைமைச் செயலகத்தில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் பெண் அலுவலர் களுக்கான "இணையத்தை கையாள்வது எப்படி?" என்பது குறித்த ஒரு நாள் பயிற்சி;
- பணி ஓய்விற்கு முந்தைய கலந்தாய்வு
- மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளில் ஈடுபடும் களப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிபுணர்களுக்கான பயிற்சி;
- வணிக வரித்துறை அலுவர்களுக்கான "மனித மூலதன மேம்பாடு" குறித்த பயிற்சி.

முக்கிய செய்திகள், தகவல்கள், நடப்பு நிகழ்வுகள் போன்றவற்றை உள்ளடக்கிய வாரந்திர "செய்தி மடல்" இந்நிறுவனத்தின் வலைதளமான www.annainstitute.org-ல் வெளியிடப்படுகிறது.

## 10. முடிவுரை

தகுதிவாய்ந்த மற்றும் பொறுப்புள்ள பணியாளர்கள் கொண்ட அமைப்பை கிடைக்கச் செய்யும் உரிய நெறிமுறைகளை ஏற்படுத்துவது இத்துறையின் நோக்கமாகும். உரிய நேரத்தில் பணியாளர்களை தெரிவு செய்வது மற்றும் அதனைத் தொடர்ந்து அவர்களுக்கு பயிற்சி அளிப்பது ஆகியவற்றின் மூலம் இந்த நோக்கம் அடையப் பெறுகிறது.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளான ஊழலற்ற வெளிப்படைத் தன்மையுடன் கூடிய நிர்வாகத்தை அடையும் வகையில் லோக் ஆயுக்தா, மாநில விழிப்புப் பணி ஆணையம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் மற்றும் மாநில தகவல் ஆணையம் ஆகிய நிறுவனங்களின் செயல்பாடு அமைந்துள்ளது.

இத்துறையின் பிரிவுகளான பணியாளர், பயிற்சி மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் ஆகியவை திறமையான மற்றும் பொறுப்பான அரசு நிருவாகத்தினை உறுதி செய்யும் தெளிவான நோக்கத்துடன் செயல்படுகின்றன.

**D. ஜெயக்குமார்,**
**அமைச்சர், மீன்வளம், பணியாளர் மற்றும்**
**நிருவாகச் சீர்திருத்தம்**



2019–2020 ஆண்டுக்கான அண்ணா மேலாண்மை நிலைய பயிற்சி நாட்காட்டியை மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் மாண்புமிகு D. ஜெயக்குமார் அவர்கள் வெளியிட்டார். நிகழ்ச்சியில் கூடுதல் தலைமைச் செயலாளர் / அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை செயலாளர் அவர்களும் பங்கேற்றனர்.




அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ள அலுவலர்களுக்கு "பணி ஓய்வுக்காலம் – ஆலோசனைகள்" என்ற புத்தகத்தை மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் மாண்புமிகு D. ஜெயக்குமார் அவர்கள் வெளியிட்டார். கூடுதல் தலைமைச் செயலாளர் / அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர், செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV தேர்வை எதிர்கொள்வோருக்கான ஊக்க முகாமில் மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் மாண்புமிகு D. ஜெயக்குமார் அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார். கூடுதல் தலைமைச் செயலாளர் / பயிற்சித் துறைத் தலைவர், செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகியோர் பங்கேற்றனர்.




அண்ணா மேலாண்மை நிலையத்தில் நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கில் மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் மாண்புமிகு D. ஜெயக்குமார் அவர்கள் "தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005" கையேட்டினை வெளியிட்டார். கூடுதல் தலைமைச் செயலாளர் /அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.